**Judicial Form No.53**

**(See Rule 42)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

C.C. No: 179 of 2024

DATE : 03.03.2026

Depositions of witness for Prosecution

PW: 7

| | | | |
|---|---|---|---|
| Name | மகாலிங்கம் | Caste | |
| Father/Husband's Name | மொக்கையன் | Calling | சார்பு ஆய்வாளர் |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03th day of March 2026

4 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். A1 to A3, A5, A7 and A8 எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 ன் படி மனு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் திரு. கார்த்திக்குமார் ஆஜர்.

**முதல் விசாரணை** –

நான் தற்பொழுது தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்து தற்பொழுது பணி ஓய்வில் இருந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 18.08.2020 அன்று வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது, கடந்த 18.08.2020 அன்று 14.30 மணிக்கு, ஏற்கனவே முதல் நிலைக் காவலர் மதுக்குமார் என்பவர் பதிவு செய்து வைத்திருந்த CSR No. 388/2020 dated 16.08.2020 (21.30 Hrs) என்ற புகாரினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அதில் புலன் கொள்ளக்கூடிய குற்றம் நிகழ்ந்திருந்த காரணத்தினால், அன்றைய தினம் 21.30 மணிக்கு நி.கு.எண். 635/2020, சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 506(2) இதச ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினமே வழக்கின் சட்ட பிரிவுகளை 147, 148, 294(பி), 506(2)

இதச–விலிருந்து சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 506(2), 109, 506(1) இதச–வாக சட்டப்பிரிவுகளை மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து, நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக் கொண்டு கடந்த 18.08.2020 அன்று 17.00 மணிக்கு சாட்சிகள் கீதா என்ற கிருஷ்ணம்மாள் மற்றும் மாரிக்கனி ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அசா. ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் 17.30 மணிக்கு சம்பவ இடத்தில் வைத்து. கம்புகள் மற்றும் அரிவாள் ஒன்றினை அத்தாச்சியில் கைப்பற்றினேன். பின்னர் அத்தாச்சியில் கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 91 ல் உள்ள வழக்கு சொத்துக்கள் சா.பொ.1 முதல் சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் இந்த வழக்கை சாட்சிகளான கார்த்திக். கவிதா, பெருமாள், சந்தானம், சுந்தரி, சுந்தர்ராஜ், பிச்சை, காளிராஜ், கீதா மற்றும் மாரிக்கனி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். எனக்கு பணி மாறுதல் கிடைத்து விட்ட காரணத்தினால் வழக்கு கோப்புகளை சார்பு ஆய்வாளர் வசம் ஒப்படைத்து விட்டேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை –**

வழக்குச் சம்பவம் எப்பொழுது நடைபெற்றது என்று சொன்னால் 16.08.2020 அன்று மாலை 05.30 மணிக்கு நடைபெற்றது. முதல் தகவல் அறிக்கை எப்பொழுது பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் 18.08.2020. இரண்டு நாட்கள் காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதற்கான காரணம் என்றால், புகார் மனு ஏற்பு ரசீது பிறப்பிக்கப்பட்டு விசாரணை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதால் காலதாமதம் ஏற்பட்டது. மேற்படி புகார் மனு ஏற்பு ரசீதினை ஆவணமாக

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பணி மாறுதல் பெற்று சென்றுவிட்ட காரணத்தினால் அது குறித்து எனக்கு தெரியாது.

இந்த வழக்கின் புகாரானது என்ன வகைக்காக கொடுக்கப்பட்டது என்றால், சொத்து பிரச்சனை சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புகார்தாரருக்கும், வழக்கின் எதிரிகளுக்கும் இடையே இருந்ததாக சொல்ல கூடிய சொத்து பிரச்சனை சம்பந்தமாக புகார்தாரர் புகாரில் விளக்கமாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். அ.சா.4 சந்தானத்தை நான் தான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி நபர் என்னுடைய விசாரணையின் பொழுது, வழக்குச் சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும், சம்பவத்தை விலக்கி விட்டதாகவும் சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். வழக்கில் நான் சாட்சியாக விசாரித்துள்ள அனைத்து சாட்சிகளும் சொத்து பிரச்சனை காரணமாக இருந்து வந்த முன் விரோதத்தினால் இந்த வழக்கு பிரச்சனை ஏற்பட்டதாக கூறினார்கள் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சம்பவமானது வத்திராயிருப்பிலிருந்து அழகாபுரி செல்லும் பிரதான சாலையில், மகாராஜபுரம் மேல தெருவுக்கு செல்லக்கூடிய பாதையில் வைத்து நடைபெற்றது என்று சொன்னால் சரிதான். மாதிரி வரைபடத்தில் பிரகாஷ் என்பவரின் வீடாக காண்பிக்கப்பட்டுள்ள இடத்திற்கு எதிரே தான் வழக்குச் சம்பவம் நடைபெற்றதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

மாதிரி வரைபடத்தில் வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லக்கூடிய இடத்திற்கு அருகில் காண்பிக்கப்பட்டுள்ள வீட்டில் உரிமையாளர்களை இந்த வழக்கில் நான் சாட்சியாக விசாரணை செய்துள்ளேனா என்றால் விசாரணை செய்யவில்லை. அ.சா.1 கார்த்தியை நான் தான் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் சரிதான். மேற்படி அ.சா.1 என்னுடைய விசாரணையில் அவர்கள் தெருவில் உள்ள பூட்டிய நிலையில் இருந்த முத்து என்பவரின் வீட்டுக்கு அருகில் நின்று கொண்டிருந்ததாக சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி முத்து என்பவரை இந்த வழக்கில் சாட்சியாக நான் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. புகார்தாரர்களுக்கும், வழக்கின் எதிரிகளுக்கும் சொத்து சம்பந்தமாக முன் விரோதம் இருந்து வந்ததாக சொல்லியுள்ள நிலையில், சொத்து பிரச்சனை சம்பந்தமாக புகார்தாரா்

இந்த வழக்கில் புகாரினை தாக்கல் செய்வதற்கு முன்பாக ஏதேனும் புகார் மனு எதுவும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை.

சொத்து பிரச்சனை சம்பந்தமாக உரிமையியல் வழக்கு எதுவும் தாக்கல் செய்யப்பட்டதாக என்னுடைய விசாரணையில் எதுவும் தெரிவித்தார்களா என்றால் இல்லை. புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் சொத்து பிரச்சனை எதுவும் கிடையாது என்றும், இந்த வழக்குக்காக பொய்யாக சொத்து சம்பந்தமாக முன்விரோதம் இருந்ததாக கூறினார்கள் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்குக்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் அதே தேதியில், புகார்தாரரின் அண்ணன் கொடுத்த புகார் மனுவினை நான் தான் பெற்று விசாரணை செய்தேன் என்றால் சரிதான். எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில், புகார்தாரரும் அவருடைய அண்ணனும் பொய்யாக ஒரு புகார் மனு கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமல் வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு